வடிகால் திட்டங்கள்.

*288 வினா—திரு. மா. வெ. நாராயணசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவொற்றியூர் நகரத்தில் அடிநில வடிகால் திட்டப்பணி எப்போது முடிவுறும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: திருவொற்றியூர் வடிகால் திட்டம் 1978—79-ம் ஆண்டில் முடிவுறும் என்று கூறப்படுகிறது.

*289 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வினா எண். 219-க்கு, 30—1—1974 அன்று அளித்த விடையையொட்டி தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மாயூரம் நகரில் பாதாள சாக்கடை அமைத்திடும் செயற் குறிப்பு தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆய்வு வேலைகள் முடிவடைந்து தலைமைப் பொறியாளரின் பரிசிலனையில் உள்ளது. இருப்பினும் குடிநீர் வசதிக்கு முன்னுரிமை வழங்க வேண்டியுள்ளதால் இத்திட்டம் இவ்வைந்தாண்டு திட்ட காலத்தில் மேற்கொள்ளப்படும் என்று உறுதி சொல்ல இயலாது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாயூரம் நகரில் பாதாள சாக்கடை அமைப்பதற்கான திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா? அதை எந்தக் காலத்திலாவது எடுத்துக் கொள்வதற்கு யோசனை இருக்கிறதா என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, எந்தக் காலத்திலே என்று என்னால் சொல்ல முடியாவிட்டாலும் அது யோசனையில் இருக்கிறது என்று சொல்லமுடியும். ஏனென்றால், பல்வேறு பகுதிகளிலே பாதாள சாக்கடைத் திட்டங்கள் வலியுறுத்தப்படுகின்றன. நகர்ப்புறத்திலே அது தேவையாகத்தானிருக்கிறது. இந்தப் பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கு முதலீடு செய்கிறபொழுது அதைத் திருப்பிக் கொடுக்கிற

1975 நவம்பர் 11]

ஆற்றல் பொதுவாக நகரசபைகளுக்கு இல்லை. அதாவது கால்வாய்களைக் கட்ட ஆகின்ற செலவுக்கான தொகையை நாம் கொடுத்தால் அதைத் திருப்பிக் கொடுக்கின்ற ஆற்றல் நகராசபைகளுக்கு இல்லை. குடிநீர் திட்டத்திற்காக வழங்கப்படும் மொத்தத் தொகையையும் குடிநீர் வழங்கவே பயன் படுத்துவதில் நியாயமிருக்கிறது. குடிநீர் திட்டத்திற்காகச் செலவு செய்தால் அதிலிருந்து வருமானம் வர வாய்ப்பிருக்கிறது. பாதாள சாக்கடைத் திட்டத்திற்குச் செலவு செய்தால், அதனை வரிகளை ஏற்றித்தான் நாம் ஈடுகட்ட வாய்ப்பிருக்கிறதே தவிர, தனியாக வருமானம் பெற வாய்ப்பு சற்றுக் குறைவாக இருக்கிறது.

புதுக்கட்டளை கால்வாயின் குறுக்கே பாலம்

*255 வினா—திரு. கு. காமாட்சி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவெறும்பூர் தொகுதி, மணிகண்டம் ஒன்றியம், பாகனூர், ஊராட்சிக்கு அருகில் புதுக்கட்டளை உயர்மட்டக் கால்வாயின் குறுக்கே பாலம் ஒன்று கட்டும் திட்டம் ஏதேனும் ஆய்வி லுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, பாலம் அமைப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதில் ஒரு பகுதி தொகையை, கிராமத்திலுள்ள மக்கள் கொடுக்க முன் வந்துள்ளார்கள். ஆகவே, இதனை மீண்டும் பரிசீலனை செய்து, கால்வாயின் குறுக்கே பாலம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பாலம் கட்ட மட்டும் ரூ. 50,000 செலவாகும். அதற்கு அணுகு சாலைகள் அமைக்க ரூ. 50,000 செலவாகும். ஆக ரூ. 1 இலட்சம் செலவாகும் என்று சொல்லப்படுகிறது. அந்தத் தொகையை ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செலவு செய்யவேண்டும். ஊராட்சி ஒன்றியத்திடம் நிதியில்லை. ஆகவே, அரசு வேறு வேலைத் திட்டங்களில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு செய்திருக்கிறார். நிதிப் பற்றுக்குறை காரணமாக இப்பொழுதில்லையென்று நான் சொன்னேன்.